COLOMBO THEOLOGICAL SEMINARY



# கிறிஸ்தவக் கண்ணோட்டத்தில் தொடர்பாடல்

# Communication from Christian Perspective


Prepared By: Rev. Gamini Jayantha

Colombo Theological Seminary

T.P: 0768791067/ Wts Up: 0710943271/ Email: gjayantha71@gmail.com


March 2025

தொடர்பாடல் என்பது உலகில் உயிரினங்கள் தோன்றியது முதல் காணப்படும் ஒரு தேவைப்பாடாகும். ஒருவர் தனது சிந்தனை. எண்ணம், உணர்வுநிலை, மனநிலை மற்றும் கருத்துக்கள் போன்றவற்றைப் பிறரிடம் எடுத்துக் கூறும் செயற்பாடு தொடர்பாடல் ஆகும். உலகில் வாழும் ஒவ்வொருவரும் தனித்துவமானவர்கள். அவரவர் தத்தம் அரசியல், சமூகம், பண்பாடு, அறிவு, ஆளுமை, வயது, முதிர்ச்சி, அனுபவம் போன்றவற்றைக் கைக்கொண்டு தனித்துவமான முறையிலே தொடர்பாடலை மேற்கொள்கின்றனர். மேசியாவாக மானிடனாகப் பிறந்த இயேசுவும் தான் வாழ்ந்த அரசியல், சமூக, பண்பாட்டுச் சூழலில் தன்னை மேசியாவாக நிரூபிப்பதற்கும், தான் உலகிற்கு வந்த காரணத்தை எடுத்துரைப்பதற்கும், மண்ணுலகில் தேவனுடைய இராச்சியத்தைக் கட்டியெழுப்புவதற்கும் பல்வேறு தனித்துவமான தொடர்பாடல் உத்திகளைக் கையாண்டார். இன்றைய நவீன யுகத்தில் ஒருவர் வெற்றியாளராகத் திகழ முறையான, தர்க்கரீதியான தொடர்பாடல் உத்திகளைக் கடைப்பிடிக்கிறவர்களாக இருக்க வேண்டும். அந்தவகையில் புதியதோர் கிறிஸ்தவ மனிதநேயப் பண்பாட்டைக் கட்டியெழுப்பவதற்கு வழிகாட்டும் இயேசுவின் தொடர்பாடல் உத்திகளைக் கண்டறிய வேண்டியது காலத்தின் தேவையாகும். அந்தவகையில் இயேசு கையாண்ட தொடர்பாடல் உத்திகளைக் கண்டறிவதே முக்கிய நோக்கமாகும். இங்கு வெற்றிகரமான தொடர்பாடல் உத்திகளை இனங்கண்டு, இயேசு கையாண்ட தொடர்பாடல் உத்திகள் மூலம் வெளிப்படும் அவரது எண்ணப்பாங்கு, மனநிலை, சமயோசிதம் போன்ற பண்புகளைப் பட்டியற்படுத்த முடியும். இங்கு உலக பொது மையமாகக் கருதப்படும் ‘‘தொடர்பாடல்’’ வேதாகமத்தின் அடிப்படையில் எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டும் என ஆழமாக அறிதல் வேண்டும். இதுவே கிறிஸ்தவ தொடர்பாடலின் வெளிப்பாடாகும்.

- **அறிமுகம்(*Introduction*)…**

**3 வகையான பேச்சுக்கள் காணப்படுகின்றன…**

1. செயலற்ற தொடர்பாடல் (*Passive Communications*)…
2. விதண்டாவிதமான தொடர்பாடல்(*Aggressive Communications*)…
3. உறுதியான தொடர்பாடல்(*Assertive Communications*)… யாக் 1:19, *James 1:19*

**எங்களுடைய பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டுமெனில் நாம் கீழ்வரும் விடயங்களை மனந்திறந்து பேசவேண்டும்…**

1. உங்கள் பிரச்சனைகளைப் பேசுங்கள்(*Talk your problems*)…
2. உங்கள் உணர்வுகளைப் பேசுங்கள்(*Talk your feelings*)…
3. உங்கள் தீர்வுகளைப் பேசுங்கள்(*Talk your solutions*)…

‘‘தொடர்பாடல் எல்லாப் பிரச்சனைகளையும் தீர்த்துவைக்கும்.’’

55% மௌனமாயிருந்து பிரச்சனைகளைத் தீர்க்கின்றனர். 45% பேசி பிரச்சனைகளைத் தீர்க்கின்றனர். – உளவியல் ஆராய்ச்சி

**3 வகையான தொடர்பாடல்கள் காணப்படுகின்றன…**

1. வார்த்தைத் தொடர்பாடல் (*Verbal Communication*) – *oral/Written/ face to face, telephone,*
2. வார்த்தையற்ற தொடர்பாடல்(*Non – Verbal Communication*) – *body languages,*
3. காட்சிப்படுத்தப்பட்ட தொடர்பாடல்(*Visual Communications*) – *drawing, design, animation*

- **தொடர்பாடல்(*Communication*)…**

மாற்றம் ஒன்றுதான் மாறாதது என்பது நியதி. இன்று முழு உலகமுமே மாறிக்கொண்டிருக்கின்றது. உலகிலுள்ள எல்ல விடயங்களும் நாளுக்கு நாள் மாற்றம் கண்டு கொண்டிருக்கின்றது. பழையன கழிதலும் புதியன புகுதலும் இயற்கையின் நியதி என்றவாறு தொடர்பாடலும் பல மாற்றங்களைக் கண்டு வளர்ச்சியடைந்து வருகின்றது என்றால் அது மிகையாகாது. தினசரி மனிதன் தெடர்பாடல் மூலமே தனது வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கின்றான் என்பதே நிதர்சனமான உண்மை. ஆகவே தொடர்பாடல் என்றால், செய்திகள், தகவல்கள், கருத்துக்கள் போன்றவற்றை ஒரு பிரிவினருக்கு இடையில் அல்லது பல பிரிவினருக்கு இடையில் ஏதேனும் ஒரு ஊடகம் ஒன்றின் மூலம் கருத்துக்கள், தகவல்கள் பரிமாற்றம் செய்வது தொடர்பாடல் எனப்படும். அதாவது செய்தி, தகவல், கருத்து என்பன யாதேனும் ஊடகமொன்றின் மூலம் இரு பிரிவினருக்கிடையே பரிமாற்றிக்கொள்ளும் செயன் முறையே தொடர்பாடல் ஆகும்.

- **கிறிஸ்தவத் தொடர்பாடல்…**

மேலே கூறப்பட்ட தொடர்பாடல் முறையானது வேதாகமத்தின் அடிப்படையில், அல்லது இயேசு கிறிஸ்து போதித்த முறையில், கிறிஸ்தவ அறநெறிகளுக்கு உட்பட்டதாய் இரு தரப்பினருக்கிடையே செய்திகள், தகவல்கள், கருத்துக்கள் பரிமாறிக்கொள்வது கிறிஸ்தவ தொடர்பாடலாகும்.

- **தொடர்பாடலின் வரலாறு…**

மனித தொடர்பாடலானது எப்போது, யாரால் எங்கு ஆரம்பிக்கப்பட்டதென்று திட்டவட்டமாக அறிய முடியாது. ஆனாலும் நம்மால் ஓரளவு ஊகிக்கக் கூடியதாகவுள்ளது. வேதத்தின் அடிப்படையில் நோக்கின், முதன் முதலில் வார்த்தைப் பிரயோகம் செய்தவர் நம் தேவனே, அவரே "வெளிச்சம் உண்டாகக் கடவது"(ஆதி 1:3) என்று கட்டளையிட்டார். அதன் பின்னால் தம் வார்த்தையால் இந்த உலகை ஒழுங்கமைத்தார். ஆனால் விஞ்ஞான ரீதியான கண்ணோட்டங்களை நோக்கின், ஆரம்பகாலத்தில் விலங்குகளுடன் ஒருவனாக வாழ்ந்த மனிதன், தன் மூளை விருத்தியின் காரணமாக தனித்துவத்தைப் பெற்றான். விலங்குகளுக்கு மோப்ப சக்தி மட்டுமே உண்டு. ஆனால் மனிதன் பகுத்தறிவை வளர்த்துக்கொண்டபோது, தமக்கிடையே தொடர்பாடல்களை ஏற்படுத்திக்கொண்டான். மனிதன் குகைகளை அண்டியே ஆதியில் வாழ்ந்தான். அங்கு ஒருவருக்கிடையே உணர்வுகள், அபிப்பிராயங்கள், அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள ஆரம்பித்தான். இங்கு வாயிலிருந்து எழுப்பப்படும் ஒலிகள், அங்க அசைவுகள், சில பொருட்களைக் கொண்டு ஒலி எழுப்புதல் என்பனவே ஆரம்ப தொடர்பாடல் யுத்திகளாகக் காணப்பட்டது. மானிட இயல்பு படிப்படியாக வளர்சியை அடையும்போது, பறை முழக்கம், நெருப்பு, மரங்களின் பட்டைகள், இலைகள், எலும்புகள், கற்கள், மரத்துண்டுகள் என்பனவே தொடர்பாடல் மூலப்பொருட்களாகப் பயன்படுத்தப்பட்டது. பின்னர்

மனிதனின் ஞாபக சக்தி அதிகரிக்க, ஞாபக மூட்டல் ஏற்பட்டது. தாம் வாழ்ந்த குகைச் சுவர்களில் இயற்கை வண்ணங்களைக் கொண்டு சித்திரங்கள் வரைந்து தொடர்பாடலைக் காட்டினர்.



அல்ரா மீரா குகைச் சித்திரம்



லெஸ்கோ குகைச் சித்திரம்

பின்னர் நடித்தும், சைகைகள் மூலமும் தொடர்பாடலைக் காட்டினர். அதன் பின்னர் வித்தியாசமான செயல்களுக்கு வித்தியாசமான குரல்களை எழுப்பப் பழகினான் இது மொழி உருவாக்கத்திற்கு முன்னோடியாக இருந்தது.

பின்னர் தொடர்பாடல் வரலாற்றில் கீழ்வரும் மாற்றங்கள் எற்பட்டன…

- **பேச்சு மொழியொன்று தோன்றல்…**

  மனிதன் தன் குரலொன்றின் வழியாக குறித்ததொரு கருத்தினை வழங்க முற்பட்டதன் காரணமாக பேச்சு மொழியொன்று தோன்றியது. மக்களிடையே கொடுக்கல் வாங்கல்கள் இல்லாத போதிலும், தமக்கென ஒரு பேச்சு பழக்கத்தினை உண்டுபண்ணியிருந்தனர்.

- **படங்களின் துணையோடு எழுத்துக்கள் உருவாதல்…**

  குகைகளில் படங்களை வரைந்து அனுபவம் பெற்றிருந்த மனிதன், தன் அனுபவங்களையும், தேவைகளையும், கருத்தில் கொண்டு தாம் பழகும், நன்கு அறிந்த பொருட்களின் உருவங்களை வரைந்து எழுத்துக்களாக மாற்றினான். இவை சித்திர எழுத்துக்கள் அல்லது படவெழுத்துக்கள்(*Pectoral letters*) எனப்பட்டது. இச்சித்திர எழுத்தினால் ஒலியொன்றிற்குப் பதிலாக படத்தை அடையாளம் காட்டப் பழகினான். இன்றும் சீனா, கொரியா, ஜப்பான் எழுத்துக்கள் படவடிவில் இருப்பதை அவதானிக்கலாம். பண்டைய எபிரேய எழுத்தும் படவடிவிலேயே அமைந்தது.









படவெழுத்துக்களின் சில மாதிரிகள்

✍ **குறியீடு சார்ந்த எழுத்துக்கள் தோன்றல்...**

பின்னர் படங்களுக்குப் பதிலாக குறியீடுகளை இட்டு அதற்கு ஒத்ததான ஒலிகளை உருவாக்கி, எழுத்து வடிவத்தைக் கொடுத்தனர். பின்னர் இது மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, உலகம் முழுவதிற்கும் பரவலானது.

✍ **அரிச்சுவடி உருவாக்கப்படல்...**

ஒரு மொழிக்காக அரிச்சுவடி ஒன்றை உருவாக்கிக்கொள்வது மானுட வளர்ச்சியில் முக்கிய பங்காகத் திகழ்ந்தது. இது தொடர்பாடலை புதிய பரிமாணத்தில் உருமாற்றியது. ஒவ்வொரு மொழியிலுமுள்ள தனித்துவத்திற்கு அமைய அரிச்சுவடிகள் உருவாக்கப்பட்டன. உதாரணமாக அங்கிலம்: 26 அரிச்சுவடிகள், தமிழ் 247, சிங்களம் 60. உலகின் ஏனைய மொழிகளுக்கும் இவ்வாறே அமைந்தன.

✍ **பலவித பொருட்களை உபயோகித்து எழுத்துக்கலை வளர்ந்தது...**

எதனைக்கொண்டு, எதில் எழுதவதென்ற பிரச்சனை ஆதிகால மனிதனுக்கு இருந்தது. ஆனால் காலப்போக்கில் மரங்களில், கற்களில், ஓலைகளில், எலும்புகளில் கூரீய ஆயுதங்களைக் கொண்டு எழுத ஆரம்பித்தான். அத்துடன் எங்கிருந்து எழுதுவதென்ற பிரச்சனையும் அவனுக்குத் தோன்றியது. இதனால் பலர் இடமிருந்து வலமாகவும்(தமிழ், சிங்களம், ஆங்கிலம்…), சிலர் வலமிருந்து இடமாகவும்(எபிரேயம், அராபி), மேலிருந்து கீழாகவும்(ஜப்பான், கொரியா) எழுதினர்.

✍ **கடதாசி உற்பத்தி...**

கி.மு 1ம் நூற்றர்டில் சீனா கடதாசியை தயாரித்தது. ஆனாலும் இதை வெளியிடாமல் 500 ஆண்டுகள் இரகசியமாக வைத்திருந்தனர். ஆனாலும் காலப்போக்கில் அது உலகமயமாகி எழுத்துக்கலையில் கடதாசி பயன்படுத்தப்பட்டது. இதன் பின்னர் கையால் எழுதி பிரதிகள் எடுத்தனர். கைப்பிரதிகள் மூலம் புத்தகங்கள் உருவாகின.

✍ **மரப்பலகை, களிமண் அச்சுகள் உருவாக்கப்படல்...**

அச்சிடல் முறை முதன் முதல் அறிமுகப் படுத்தப்பட்டதும் சீனர்களாலேயே. அவர்கள் களிமண், பலகைகளினால் அச்சுகள் செய்து பிரதிகளை எடுத்தனர். அதன்பின் பூச்சுக்கள், மைகள், சாயங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவற்றைப் பயன்படுத்தி அச்சிட்டனர்.

✍ **மனிதன் அல்லது பறவைகள் மூலம் செய்திகளை அனுப்பும் முறைகள் உருவாதல்...**

ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு செய்திகளைக் கொண்டு செல்லும் தேவை ஏற்பட்டது. இது ஆட்சியாளருக்கும், போர் களங்களுக்கும் தேவைப்பட்டது. இதனால் குதிரைகள் மூலமும், ஈட்டிகளில் செய்திகளைக் கட்டி எறிவதின் மூலமும், மனிதர்கள் மூலமும், புறா போன்ற பறவைகள் மூலமும் செய்திகள் பரவப்பட்டது.





**புறாக்கள் மூலம் தூதனுப்பல்**

- **ஜோஹ்ஹான்ஸ் குட்டன்பேர்க்(*Johannes Gutenberg*) என்பவரால் நவீன அச்சிடல் முறை அறிமுகமாதல்...**



சீனர்களால் கண்டுபிடிக்கப்பட்ட அச்சிடல் தொழல் நுட்பம் ஜெர்மனியைச் சேர்ந்த ஜோஹ்ஹான்ஸ் குட்டன்பேர்க் என்பவரால் நவீனமயமாக்கப்பட்டு கி.பி 14ம் நூற்றாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இங்கு இவர் 3 முக்கிய காரியங்களை நிறைவேற்றினார்.

1. ஈய உலோகத்தைப் பயன்படுத்தி எழுத்துக்களை உருவாக்கினார்.
2. கையால் அச்சிடுவதை விடுத்து இயந்திரத்தை அறிமுகம் செய்தார்.
3. அச்சிடுவதற்குத் தேவையான வண்ணப் பூச்சுக்களை உருவாக்கினார்.

இன்றுவரை அபிவிருத்தியடைந்துள்ள அச்சுக்கலைக்கு ஆணிவேர் இவர்தான்.

- **மின் மற்றும் இலத்திரனியல் சமிக்கை சங்கேத தொழில் நுட்பங்கள் உருவாகியமை...**

இது உலகின் உன்னத ஆய்வாளர்கள் பலபேரின் கண்டுபிடிப்புக்களாகும். 19 ம் நூற்றாண்டில்...

- கம்பி வழியாக மின் சமிக்கை அனுப்புகிற முறை மோர்ஸ்(*Morse*) என்பவராலும்
- கம்பி வழியால் ஒலியை அனுப்புகிற தொலைபேசி முறையை கிரஹம் பெல்(*Graham Bell*) என்பவராலும்.
- கம்பி இல்லாமல் மின் சமிக்கை அனுப்பும் தொலை ஒலிக்கடத்தி முறை மார்க்கோனி(*Marconi*) என்பவராலும் கண்டுபிடிக்கப்பட்டது.

- **நவீன தொடர்பாடல் சாதனங்கள் உருவாதல்...**

இன்று நாம் பாவிக்கும் நவீன தொடர்பாடல் சாதனங்கள் படிப்படியாக உருவாகின. அதற்கு அடிப்படையாக அமைந்தது கணணியின் கண்டுபிடிப்பாகும். அதைத்தெடர்ந்து கையடக்கத் தொலைபேசி, ஸ்மார்ட் போன், மடிக்கணணி, ஐபோன் இப்படி பட்டியலை அடிக்கிக்கொண்டே போகலாம்.

## ➢ கிறிஸ்தவத் தொடர்பாடல்(*Communication from a Christian Perspective*)…

### ▪ கிறிஸ்தவ வாழ்வில் தகவல் தொடர்பாடலின் முக்கியத்துவம்…

- நற்செய்தி அறிவிக்க(மத் 28:19-20)
- ஆராதிப்பதற்கு(சங் 89:1)
- தேவனுடைய வார்த்தையைக் கேட்பதற்கும், போதிப்பதற்கும்(யோவா 3:2) பிரசங்கிப்பதற்கும்(யாக் 1:19)
- தேவ வார்த்தையைக் கலந்துரையாடுவதற்கும், தியானிப்பதற்கும்(சங் 1:2)
- ஊக்கமளிப்பதும், மற்றவரைத் தூக்கிவிடுவதற்கும்(எபி 6:1)
- ஆராய்ந்து பார்த்து, அறிக்கையிடுதல்(யோவா 5:39)
- தேவனோடும், மனிதர்களோடும் உறவுகளைக் கட்டியெழுப்ப(பிலி 4:9, 1 திமோ 4:12)
- பொதுமக்களுடன் தொடர்புற(ரோம 1:8, 1 கொரி 1:4, பிலி 1:3, கொலோ 1:3)

### ▪ தொடர்பாடல்களில் கிறிஸ்தவ விழுமியங்கள்…

- தேவைனேயே மகிமைக்குட்படுத்தல் வேண்டும்(1 கொரி 10:31)
- பிறரை அன்புடன் அணுக வேண்டும்.
- பிறரின் ஆன்மீக வழிபாட்டை அவதூறு செய்யக்கூடாது.
- எதிர்பாலாருடன் வீணான பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும், தொடுகைமுறை பேச்சுக்கள் கூடாது.
- ஒருவரை ஒருவர் கனம்பண்ண வேண்டும்.
- வீண் பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும்(1 பேது 2:2)
- பெருமை பாராட்டக்கூடாது(1 கொரி 1:26-29, 1 கொரி 4:7)
- பொறாமையான தொடர்பாடல் ஆகாது(1 பெது 5:6)
- சண்டையிடுதல் கூடாது(நீதி 27:4,1 திமோ 3:3)
- பொய்யுரைக்கக் கூடாது
- இச்சையைத் தூண்டும் தொடர்பாடல் ஆகாது(2 திமோ 2:22)
- பண ஆசையான தொடர்பாடல் ஆகாது(1 கொரி9:7)
- வரம்பு மீறிய தொடர்பாடல்(லூக் 19:17)
- உங்கள் திறமையில் மட்டும் சார்ந்திருங்கள்(1 கொரி 4:20)
- பதறிய பேச்சு ஆகாது(சங் 106:32-33)
- 10 கட்டளைகளுக்கு உட்பட்டிருத்தல்.

### ▪ தகவல் தொடர்பாடல்கள் கிறிஸ்தவ விழுமியங்களை பாதிக்கும் விதங்கள்…

- தேவ பயமற்ற தொடர்பாடல்கள்.
- மனிதனைத் திருப்திப்படுத்த முற்படுதல்
- பிரபல்யமாக முற்படுதல்

- புனைகதைகளை நம்புதல்
- மேற்கோள் இல்லாத செய்திகளைப் பரப்புதல்
- ஆராய்ந்து பார்க்காமல் செய்திகளை வெளியிடுதல்.
- பண ஆசையுடன் தொடர்பாடலை நடத்துதல்.
- குறுக்கு வழிகளை தொடர்பாடலில் பயன்படுத்தல்.
- பொறுப்புணர்வற்ற தொடர்பாடல்.
- இச்சையுடனான தொடர்பாடல்.
- பழிவாங்கும் நோக்குடன் நடத்தப்படும் தொடர்பாடல்கள்.
- சுய மதிப்பிற்கான தொடர்பாடல்கள்.

- **கிறிஸ்தவக் கோட்பாடுகள்(*Christian Ethics*)**
  - **கிறிஸ்தவக் கோட்பாடுகளின் அடித்தளம்…**
    - **அன்பும் கருணையும்…**
      - **அன்பே அடிப்படை…**

        நம் தேவன் அன்பாயிருக்கிறார்(1 யோவா 4:8). ஆகவே நாமும் பிறரில் அன்பு செலுத்துவோம். பத்துக் கட்டளைகளை தேவன் அன்பினால் இரண்டாக வகைப்படுத்துகின்றார்(மத் 22:37-40). தேவன் தன் குமாரனைத் தருமளவிற்கு நம்மில் அன்பு கூர்ந்தார்(யோவா 3:16) அதேபோல் நாமும் பிறரில் அன்பு கூருவோம். அன்பின் வழிதான் கிறிஸ்தவம். அன்புடனான தொடர்பாடலைக் கைக்கொள்வோம்.

      - **தகவல் தொடர்புகளில் அன்பும், இரக்கமும்…**

        தகவல் தொடர்பாடல்களில் நாம் அன்பையே பிரதானமாகக் கையாள வேண்டும். நாம் தொடர்பாடல்களில் அன்பின்றிச் செயற்படுவோமானால் பிறரை துக்கத்திற்குள் தள்ளி விடுவோம். அன்பு எதையும் செய்யும்(1 கொரி 14). அன்பிருப்பின் தொடர்பாடல்களில் இரகசியங்களைக் காப்போம். வீணான பிரச்சனைகள் உருவாகுவதை அன்பு தடுக்கின்றது.

    - **உண்மையும், நேர்மையும்…**
      - **தொடர்பாடல்களில் நேர்மையும், வெளிப்படத்தன்மையும்…**

        தொடர்பாடல்களில் நாம் நேர்மையாகவும், வெளிப்படத்தன்மையுடனும் செயற்பட வேண்டும். அப்போதுதான் கிறிஸ்தவ அறநெறிகள் பாதுகாக்கப்படும். உள்ளதை உள்ளதென்றும் இல்லாததை இல்லை என்றும் கூற வேண்டும்(மத் 5:37). பாராபட்சம் பாராத தொடர்பாடலாக இருத்தல் வேண்டும்.

- **பொய்யையும், வஞ்சகத்தையும் தவிர்த்தல்...**

  எமது தொடர்பாடல் பொய்யையும், வஞ்சகத்தையும் தவிர்க்கத்தக்கதாக இருத்தல் வேண்டும். தவறான செய்திகளைப் பரப்பவது தேவனின் 6ம் கட்டளையை மீறுவதாகும். பொய் தொடர்பாடல்கள் வீணான சண்டைகளை உருவாக்கும்(நீதி 6:9). மேலும் பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவை(நீதி 12:22).

**➤ மரியாதையும், கண்ணியமும்...**

- **வேறுபாடுகளைத் தவிர்த்து பிறரைக் கண்ணியத்துடன் நடத்துதல்...**

  பாகுபாடுகள் இன்றி தொடர்பாடல்களில் மற்றவரின் நாமத்திற்கு களங்கம் ஏற்படாதவாறு செயற்பட வேண்டும். சகோதரர்களுக்கிடையே பாகுபாடு பார்ப்பின் எம்மை அறியாமலேயே வேறுபாடுகளை தோற்றுவிக்கின்றோம். பிறரின் பேரை நாம் கெடுக்க முற்படலாகாது.

- **ஒவ்வொருவரின் உள்ளார்ந்த உணர்வுகளை மதித்தல்...**

  பிறரின் உணர்வுகளுக்கு நாம் மதிப்பளிக்க வேண்டும். ஒவ்வொருவரும் தனிப்பட்ட பிரச்சனைகளிலிருப்பர். அதனால் அவர்களின் பார்வையில் அவர்களை அணுக வேண்டும். தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியும் என்ற பழமொழிக்கமைய மற்றவரின் உணர்வுகளை நாம் மதிக்கும்போது சுமகமான தொடர்பாடல்கள் ஏற்படும்.

**➤ மன்னிப்பும், ஒப்புரவாகுதலும்...**

- **மன்னிப்பின் மூலம் முரண்பாடுகளைத் தீர்த்தல்...**

  இயேசு கூறியதுபோல் நாம் பிறரை மன்னிக்க எப்பவும் தயாராய் இருத்தல் வேண்டும்(மத் 18:22). மன்னிப்பதன் மூலம் நமக்குள் இயேசு வாசம் செய்வதை பிறருக்கு அறிவிக்கின்றோம். மன்னிப்பதால் சமாதானத்தை உருவாக்கு கின்றோம். குப்பையைக் கிழறுவதால் நாற்றம்தான் வரும். அதுபோல பழைய பிரச்சனைகளைக் கிளறாது மன்னிப்பதினால் புதிய உறவு எனும் நறுமணம் விசும்.

- **தகவல் தொடர்புகளில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த மன்னிப்பை பயன்படுத்தல்...**

  உடைந்து போன உறவுகளுக்கிடையே மன்னிப்பு எனும் பாலத்தை உருவாக்கி, நல்லிணக்கத்தை உருவாக்க முடியும். இதனால் தேவனின் சமாதானத்தை ருசிக்க முடியும். பழிவாங்குதல் தேவனுக்கு மாத்திரமே உரியதாகும்(உபா 32:35, ரோம 12:19). ஆகவே தொடர்பாடல்களில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் தேவ இராச்சியத்தில் ஒற்றுமையை உருவாக்க முடியும்.

➢ **கிறிஸ்தவ சமூகத்திற்குள் தொடர்பாடல்…*(Communications in the Christian Society*)**

- **ஆராதனையிலும், கூடுகையிலும்..**

  - **கடவுளுடன் தொடர்பாடலை ஏற்படுத்தும் ஆராதனை…**

    நமது ஆராதனையானது, தேவனுக்குத் தூரமாயிருந்த(ஏசா 59:2) எம்மை தேவனண்டை கொண்டு செல்லும். எமது ஆராதனை மூலம் தேவ சமூகத்திற்குள் நுழைகின்றோம். அப்பொழுது என்னைப் பற்றிய தேவனுடைய திட்டங்களை அறிந்து செயற்படுகிறவர்களாகிறோம். இதனால் சாட்சியான வாழ்வு வாழ உந்தப்படுகின்றோம். மற்றும் ஆராதனையில் நாம் மனந்திரும்பவதால் நம்மையும், பிறரையும் மன்னிக்கும் பண்பை அடைகின்றோம்.

  - **பிறருடன் தொடர்பாடலை ஏற்படுத்த உதவும் ஆராதனை…**

    எமது ஆராதனையில் இன்னுமொரு சிறப்பம்சம், தூர இருக்கின்ற சகோதரர்களுடன் ஒருமித்து, ஓர்மனப்பட்டு ஒரே சிந்தையில் இருக்கின்றோம். இதனால் சபையில், கிறிஸ்தவத்திற்குள் ஒற்றுமை பெருகுகின்றது. நாம் ஒற்றுமையாக இருக்கும்போது, பிசாசினால் எமக்கு அண்மையில் வருவது கஷ்டமான விடயமாக மாறும். ஆகவே ஆராதனையில் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு ஒற்றுமையாய் இருக்கிறோம். அத்துடன் இயேசுவும் எம்முடன் வாசம் செய்பவராகின்றார்(மத் 18:20) இயேசுவின் சிலுவை தியாகமும், தேவனுடனான உறவையும், சக மனிதனுடனான உறவையும் புதப்பிப்பதாகவே அமைந்துள்ளது.

- **வேதப்படிப்பு…**

  - **கிறிஸ்தவ நம்பிக்கைகளைப் பகிர்ந்துகொள்ளும் தொடர்பாடல்கள்…**

    வேதப்படிப்பில் கிறிஸ்தவத்தின் சத்தியங்கள் பகிர்ந்துகொள்ளப்படுகின்றன. அத்துடன் தேவன் யார்? அவரால் என்ன செய்ய முடியும் போன்ற தகவல்களை அறிகின்றோம். இதனால் தேவனுடனான உறவை அதிகரிக்கின்றோம். அத்துடன் தேவன் நம்முடன் தொடர்புகொள்ளும் ஊடகமே அவரது வார்த்தைதான்.இதனால் தேவனின் சித்தத்தையும், விருப்பபையும் புரிந்துகொண்டு அவரக்கு கீழ்படிந்து வாழ்கின்றோம்.

  - **வேதாகம செய்திகளில் தொடர்பாடல்கள்…**

    வேதாகமத்தை கற்கும்போது, அதில் காணப்படும் பாத்திரங்களுடன் தொடர்பினை ஏற்படுத்துகின்றோம். வேதத்திலுள்ள தேவனக்கக் கீழ்படிந்த பரிசுத்தவான்களின் வாழ்க்கையுடன் தொடர்பு கொண்டு எமது வாழ்வை சிறப்பிக்கின்றோம். மேலும் வேதத்தில் பிழையான வழிகளில் வாழ்ந்த கீழ்படியாதவர்களின் வாழ்வோடு தொடர்பு பட்டு எமது வாழ்வை திருத்திக்கொள்கின்றோம். அத்துடன் வேதத்தில் வரும் கதாபாத்திரங்கள் எவ்வாறு தேவனுடனும், சக மனிதர்களுடனும் தொடர்பினை எற்படுத்தியிருந்தார்கள் என்பதை அறிந்து நமது நடைகளை மாற்றிக்கொள்கிறோம்.

- **கூட்டுறவும், சார்ந்திருத்தலும்…**

  - **தொடர்பாடல் மூலம் கிறிஸ்தவ சமூகத்திற்குள் வலுவான தொடர்வை ஏற்படுத்தல்…**

    கிறிஸ்தவ வாழ்வென்பதே கூட்டாக வாழவே அழைக்கப்பட்டோம். ஆகவே பிறருடனான நமது தொடர்பாடல்கள் பிறரை தேவனோடும், நம்மோடும் இணைக்கும் வகையில் இருத்தல் வேண்டும். நமது தொடர்பாடல்கள் பிறரின் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணுவதாக அமைந்திருத்தல் வேண்டும். நமது தொடர்பாடலினால் பிறர் தேவனைவிட்டு பின்னடையவிடாதிருக்க வேண்டும். நமது தொடர்பாடல்கள் பிறரை, இன்னும் இன்னும் தேவனண்டை வரச்செய்வதாக இருத்தல் வேண்டும். எல்லோருடனும் பாரபட்சமின்றிப் பழகி, நல்ல உறவை வளர்க்க வேண்டும். புரியாத விடயங்களை புரிய வைக்க பின்னிற்கக் கூடாது.

  - **தொடர்பாடல் மூலம் உணர்வுகளைப் பகிர்ந்து, ஆதரவளித்தல்…**

    நமது தொடர்பாடல் பிறருக்கு சமாதானத்தைத் தருவதாகவும், நம்பிக்கையை ஏற்படுத்துவதாகவும் இருத்தல் வேண்டும். நமது ஒவ்வொரு சொற்களும் அவதானத்துடயேயே பிரயோகிக்கப்பட வேண்டும். அத்துடன் தொடர்பாடல்களின் மூலம் பிறரது உணர்வுகளை அறிந்து அவற்றை மதித்து, நம்மால் முடிந்த உதவிகளைச் செய்ய வேண்டும். பணம், பொருளைவிட ஒரு ஊக்கமளிக்கும் வார்த்தை பெறுமதியானது. ஆகவே வீழ்ந்து போகின்ற ஆத்துமாக்களுக்கு நமது தொடர்பாடல் நம்பிக்கை கொடுப்பதாக இருத்தல் வேண்டும். அத்துடன் நம்பிக்கையற்று இருப்பவர்களுக்கு உங்கள் ஊக்கமான ஜெபம் அருமருந்தாய் அமையும் என்பதில் சந்தேகமில்லை. ஆகவே தொடர்பாடல்கள் மூலம் கிறிஸ்தவர்கள் நாம் ஒருவரை ஒருவர் தாங்க வேண்டும்.

## உலகத்துடனான தொடர்பு(*Communications with the World*)

- **நற்செய்தி அறிவித்தல்(*Gospel*)…**

  - **நற்செய்தியை பிறருக்கு அறிவிக்கும் தொடர்பாடல்…**

    நாம் ஆத்தும ஆதாயம் செய்ய வேண்டும் என ஆண்டவர் எதிர்பார்ககிறார். இயேசுவுடன் ஆத்துமாக்களைச் சேர்க்காதவர்கள் சிதறடிக்கப்படுவார்கள்(லூக் 11:23) என ஆண்டவர் கூறுகின்றார். ஆகவே நாம் ஆத்தும ஆதாயம் தேட வேண்டும். அதற்கு தகுதியான தொடர்பாடலை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் மிஷனறி வேலைகளும் செய்ய வேண்டும். இங்கு நற்செய்தி அறிவிக்கும் தொடர்பாடலானது புனைப்பில்லாத, சத்தியத்தை அறிவிப்பதோடு பொறுமையாகவும், கீழ்படிவாகவும், அன்புடனும் தொடர்புபடல் வேண்டும். நாம் நம்மை அறிவிக்காமல் இயேசுவையும், அவர் செய்த நன்மைகளையும் அறிவிக்க வேண்டும். பிறரின் கேள்விகளை நன்கு செவிமடுத்து பதில் கூற வேண்டும். உலக ஆசீர்வாதத்தை முன்நிறுத்தக்கூடாது.

- **நற்செய்தி அறிவிக்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய கிறிஸ்தவ அறநெறிகள்…**
    - பொய் சொல்லக் கூடாது.
    - கடுமையான வார்த்தைப்பிரயோகம் கூடாது
    - பிறரின் மதநம்பிக்கையை பழிக்கக் கூடாது.
    - அவசரப்படக் கூடாது.
    - 10 கட்டளைகளை முன்நிறுத்திப் பேச வேண்டும்.
    - எல்லை தாண்டிப் பேசக் கூடாது.
    - தொடுகை முறையிலான பேச்சுக் கூடாது.
    - எதிர்ப்பாலுடன் பேசும்போது கவனம் வேண்டும்.

- **சமூக நீதியும், ஒழுக்கங்களும்(*Social Justice & Morals*)…**
    - **சமூகப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும், நீதியை நிலை நாட்டவும் தொடர்பாடலைப் பயன்படுத்தல்…**

      ஒரு கிறிஸ்தவனாக சமூகத்தில் நிகழும் அநியாயங்களைத் தட்டிக் கேட்க வேண்டும். அது அரசியல், பொருளாதார, சமூக, கல்வி, சுகாதார மற்றும் இதர விடயங்களாக இருக்கலாம். யோவான் ஸ்நானகன், இயேசு, அப்போஸ்தலர்கள் தட்டிக் கேட்டனர். ஆகவே நாமும் பிழைகளைச் சுட்டிக்காட்ட வேண்டும். ஒடுக்கப்பட்டவர்களுக்காக துணை நிற்க வேண்டும். ஆனால் அரச நீதிகளுக்கக் கட்டப்பட்டு இருத்தல் வேண்டும். சமூகத்தில் நிலவும் துஷ்பிரயோகம், பெண்ணடிமை, தராதரம் பார்த்தல், சாதிப்பிரச்சனை, போதைப்பொருள், மோசடி போன்றனவற்றிற்கு நியாயமான பதில்களைக் கொடுக்க வேண்டும்.

    - **ஒடுக்கப்பட்டவர்களுக்காக குரல் கொடுத்தல்…**

      சமூகத்தில் ஒடுக்கப்படுகின்ற விதவைகள், ஏழைகள், திக்கற்றவர்கள், முடியாதவர்கள் ஆகியோருக்காக நாம் குரல் கொடுக்க வேண்டும்(சங் 103:6,146:7, ஏசா 1:17)) எமது தொடர்பாடல் சமூகத்தில் நீதி, நியாயம் என்பன சீராக இயக்கவதற்கு உதவி செய்வதாக இருக்க வேண்டும். எமது ஆண்டவர் ஒடுக்கப்பட்டவர்களுக்காக வழக்காடுகிறவர். ஆகவே நாமும் எமதாண்டவரைப் பின்பற்ற வேண்டும்.

- **பிற மதங்களுக்கிடையேயான தொடர்பாடல்கள்(*Communications between Other Religions*)**
    - **ஏனைய சமயங்களைப் பற்றி நாம் ஏன் கற்க வேண்டும்? (*Why we must to learn about Other Religions*?)**
        1. அவற்றைப் பற்றி ஏற்கனவே அறியாததினால் அல்லது போதுமான அறிவை நாம் கொண்டிராததினால் கற்க வேண்டும்.
        2. ஏனைய சமயத்தவரின் ஆன்மீக தாகம், அவர்களின் ஆவல், ஆன்மீக வாழ்க்கை முறை ஆகியவற்றை அறிந்து கொள்ளவும், அந்த சமயங்களிலுள்ள நன்மைகளை இனங்காணவும் அவற்றை நாம் கற்க வேண்டும்.

3. ஏனைய சமயங்களினூடாகவும் கடவுள் தன்னை வெளிப்படுத்துவதை விளக்கலாம். அதே வேளையில் தவறான முறைகளில் கடவுளை மக்கள் தேடுவதையும் காணலாம். இதன் மூலம் மற்றவர்களின் மேல் கரிசனைகொண்டு அவர்களுக்கு செவிகொடுக்க முடியும்.
4. எங்கள் அறிவையும் விளங்கிக்கொள்ளும் தன்மையையும் விரிவாக்குகிறது. சமயமும் கலாச்சாரமும் ஒன்றோடு ஒன்று தொடர்புள்ளவையாக இருக்கின்றன. ஏனைய கலாச்சாரங்களை நன்கு விளங்கிக்கொள்ள ஏனைய சமயங்களை விளங்கிக்கொள்வது அவசியமாகும். ஏனைய கலாச்சாரங்களை விளங்கிக்கொண்டால் அதற்கேற்ப அவர்களோடு தொடர்புகொள்ள முடியும்.
5. சமயங்களைப் படிப்பது அச்சமயத்தைச் சேர்ந்த மனிதர்களைப் பற்றிப் படிப்பதாகும். சமூக அமைப்பு, உளவியல் நிலை, சமய பின்னணிக்கு ஏற்ப மனிதர்களின் செயற்பாடுகள் அமைந்திருக்கும்.
6. பல்சமய இணைப்பு (*Syncretism* - ஏனைய சமய கோட்பாடுகளை உள்வாங்குதல் அல்லது இணைத்தல்), சமரச இணக்கம் (*Compromise*) போன்றவற்றை தவிர்த்துக்கொள்ள முடியும்.
7. இறையியல் (*Theology*), அருட்பணி (*Mission*), மானுடவியல் (*Anthropology*) போன்ற நெறிகளின் கற்கையை பூரணப்படுத்துகிறது.

➤ **பிற மதத்தினருடன் கண்ணியமான முறையில் தொடர்புறுதல்…**

சமய அனுஷ்டானங்களும், பழக்க வழக்கங்களும் ஒவ்வொரு மதத்திற்கும் வேறு வேறானவைகள். சிலவை ஒன்றுபட்டாலும், பெரும்பாலான படிப்பினைகளும், கோட்பாடுகளும் மாறுபட்டனவாகவே இருக்கின்றது. பிற மதங்களுடன் தொடர்புறும்போது, கீழ்வரும் காரணிகளை நாம் மனதில் வைக்க வேண்டும்…

- **மொழி**: மதசம்மந்தமான விஷேசித்த மொழிகள் பல காணப்படுகின்றன. அவர்களின் ஆராதனை, ஜெபம், சடங்குகள் என்பனவற்றிற்கு தனித்தவமான பாஷைகள் காணப்படுகின்றன. அகவே அவர்களுடன் தொடர்புறும்போது மொழியைக் கருத்தில் கொள்ள வேண்டும். இல்லாவிடின் அவர்களும், நாமும் அசௌகரியத்திற்கு ஆளாகுவோம்.

- **சமூக அமைப்பு:** மனித நடத்தையும், மனிதத் தொடர்புகளும் பாரம்பரிய நம்பிக்கைகளினாலும், ஒப்பந்தங்களினாலும் கட்டுப்படுத்தப்படுகின்றன. சமூகத் தொடர்புகளும், உறவுகளும் சமய சம்பந்தப்பட்டவையாக இருக்கின்றன. பலவேளைகளில் இறந்தவர்களின் ஆவிகளோடும், மிருகங்களோடும் கூட காணப்பட்டன.

- **சமயப் பெரியார்கள்:** ஒவ்வொரு ஆதிசமயத்திலும் இவ்வுலக காரியங்களை கண்காணாத உலகத்தோடு தொடர்புபடுத்தும் இணைப்பாளர்கள் காணப்பட்டார்கள். இவர்கள் மிகவும் முக்கிய மனிதர்களாகக் கருதப்பட்டார்கள். இவர்கள் சமய சடங்காச்சாரங்களையும் சமய போதனைகளையும் மக்கள் மத்தியில் புகட்டும் ஆசான்களாக காணப்பட்டனர்.

- **வாய்மொழி சமய இலக்கியங்கள்:** எழுத்து வடிவில் ஆதாரங்கள் காணப்படவில்லை. ஆனால் பழமொழிகள், கற்பனை கட்டுக்கதைகள், புராணக் கதைகள் போன்றவற்றையும், சட்டங்கள், பழக்கவழக்கங்கள் போன்றவற்றையும் வாய்மொழி மூலமாகவே ஒரு சந்ததியிலிருந்து அடுத்த சந்ததிக்குப் பரிமாற்றப்பட்டன.

- **மந்திரங்கள்/ஜெபம்:** இவை மிகவும் முக்கியமானவையாகக் காணப்பட்டன. மக்கள் தங்கள் உண்மையான உணர்வுகளை இறைவனுக்கு வெளிப்படுத்த இவைகள் உதவி செய்தன. இவற்றின் மூலம் சக்தியை மக்கள் பெற்றார்கள்.

- **பாடலும் இசையும்:** பாரம்பரியமாக மக்கள் பாடுவதிலும், இசைப்பதிலும், நடனமாடுவதிலும் பிரியமுள்ளவர்களாகக் காணப்பட்டனர். இவை சமய சம்பந்தமானவையாகவும், அநேகமாக சடங்காச்சாரங்களிலும், திருவிழாக்களிலும் முக்கிய இடம் பெற்றன.

- **சித்திரமும் சிற்பக்கலையும்:** பல்வேறு ஓவியங்கள், சிற்பக்கலைகளினூடாக சமய சம்பந்தமான வரையப்பட்ட ஓவியங்கள், மரங்களிலும், கற்களிலும் செதுக்கப்பட்ட உருவங்கள், களிமண் உருவங்கள், உடலில் வரையப்பட்ட ஓவியம் (பச்சை குத்துதல்), கேடகங்களிலும் ஈட்டிகளிலும் பொறிக்கப்பட்ட சின்னங்கள், பானைகள் மற்றும் விளக்குத் தண்டுகள் போன்றவற்றில் காணப்படும் படங்கள் போன்றவை முக்கிய தகவல்களைத் தருகின்றன.

- **வழிபாட்டு ஸ்தலங்கள் அல்லது புனித ஸ்தலங்கள்:** வெவ்வேறு இடங்கள் வழிபாட்டு ஸ்தலங்களாகக் கொள்ளப்பட்டன. அவை நீர்வீழ்ச்சியாகவோ, குளங்களாகவோ, குகைகளாகவோ, சில மரங்களாகவோ, மலைகளாகவோ, குன்றுகளாகவோ காணப்பட்டன. இவ்விடங்களில் இறை பிரசன்னம் இருப்பதாக நம்பப்பட்டது.

- **சமூக விலக்குச் செயல் (*Taboo*):** இதற்கு தடைசெய்யப்பட்டவை அல்லது விலக்கப்பட்டவை என்று அர்த்தம் கொள்ளலாம். தொடக்கூடாது, உண்ணக்கூடாது என பல வகைப்பட்ட காரியங்கள் தடை செய்யப்பட்டிருக்கும்.

மேற்கூறப்பட்ட காரியங்கள் ஆதிசமயங்களை மதிப்பீடு செய்யவும், அவற்றின் செயல்பாடுகளையும், நம்பிக்கைகளையும் அறிந்து கொள்ளவும் உதவும்.

- **பிறமத நம்பிக்கைகளுக்கும் நற்செய்திக்கும் இடையிலான வேறுபாடுகள்(*Different between The Gospel and Other Beliefs*)…**

| | **பிறமத நம்பிக்கைகள்** | **நற்செய்தி** |
|---|---|---|
| 1 | மனிதன் உருவாக்கியவை | கடவுள் கொடுத்தது |
| 2 | மனிதன் கடவுளுக்காக செய்வது | கடவுள் மனிதனுக்காக செய்வது |
| 3 | மனிதன் கடவுளைத் தேடுவது | கடவுள் மனிதனைத் தேடுவது – (யோவா 15:16; 1 யோவா 4:10) |
| 4 | சுயநீதி எனும் ஏணியின் மூலம் கடவுளை உயரத்தில் தேடுவது | கடவுள் மனிதனுக்காக உன்னதத்திலிருந்து இறங்கி வருவது - பிலி. 2:6-8 |
| 5 | நல்ல நோக்குடையது | நல்ல செய்தியுடையது |
| 6 | நல்ல புத்திமதிகளையுடையது | மகிமையின் பிரகடனத்தையுடையது - லூக்கா 4:17-21 |
| 7 | வெளிப்பிரகாரமான சீர்திருத்தம் | உள்ளான நிலைமாற்றம் |
| 8 | வெள்ளையடிக்கிறது | வெண்மையாகக் கழுவுகிறது |
| 9 | வெளியரங்கமான கிரியைகளினால் போலியாக திருப்தியடைவது | விசுவாசிக்கின்ற ஒவ்வொருவருக்கும் தேவ வல்லமையினால் இரட்சிப்பு வருகிறது |
| 10 | அநேகமானவை | ஒன்றே |
| 11 | மனிதனுடைய சுயமுயற்சி | தேவனுடைய ஈவு |
| 12 | கிரியைக்கு முதலிடம் | கிருபையினாலே விசுவாசத்துக்கு முதலிடம் |
| 13 | நன்மை செய்தால் நல்லவனாக மாறுவாய் | நீதிமானாய் மாறி நன்மை செய் - எபே. 2:10 |
| 14 | உண்மையைக் கூறி உத்தமனாகு | உத்தமனாகியதினால் உண்மையைக் கூறு |
| 15 | நல்ல சிந்தனை மூலம் மனம் புதிதாக்கப்படும் | மனம் புதிதாகிறதினாலே நல்ல சிந்தனை உருவாக்கப்படும். |
| 16 | புண்ணியம் கிடைக்கும் என்பதற்காக மற்றவர்களுக்கு உதவுங்கள். | கடவுளின் அன்பினால் நிறைந்து மக்கள் மீது அன்புகூர்ந்து உதவுங்கள் - 1 கொரி. 13:3 |
| 17 | தத்துவகோட்பாடுகள், பிரமாணங்கள், அடையாளங்கள் வலியுறுத்தப்படுகிறது. | ஒரு நபர் (இயேசு) மட்டுமே வலியுறுத்தப்படுகிறார். |
| 18 | கோட்பாடுகளை ஏற்கும்படியும் பின்பற்றும் படியும் கூறுகிறது. | நபரை (இயேசுவை) ஏற்றுக்கொண்டு விசுவாசித்து பின்பற்றும்படி கூறுகிறது. |
| 19 | சடங்காச்சாரங்கள் முக்கியம் | உறவு முக்கியம். |
| 20 | மனிதனை வரவழைத்து அவன் இருக்கும் வண்ணமாகவே அவனை விட்டுவிடுகிறது. | மனிதனை அழைத்து அவன் வாழவேண்டிய விதத்தில் அவனை உருவாக்குகிறது. |

- **இஸ்லாமுக்கும் கிறிஸ்தவத்துக்கும் இடையிலான வேறுபாடுகள்(*Different between Christianity & Islam*)…**

| | **இஸ்லாம்** | **கிறிஸ்தவம்** |
|---|---|---|
| 1 | அல்லாஹ்விற்கு அடிபணிதல் | தேவனோடு உறவாடுதல் |
| 2 | அல்லாஹ் மட்டுமே கடவுள் (இணைவைத்தல் பாவம்) | தேவன் திரியேகத்துவமானவர் - பிதா, குமாரன், பரிசுத்த ஆவி |
| 3 | அல்லாஹ் எல்லாவற்றையும் கடந்தவன், மனிதன் அல்லாஹ்விற்கு அடிமை | தேவன் சர்வ வல்லவர், சர்வ ஞானி, சர்வ வியாபி மற்றும் நித்தியமானவர், மனிதன் தேவனுக்கு பிள்ளைகள். |

| | | |
|---|---|---|
| 4 | அல்லாஹ் நீதியுள்ளவன், தீயவர்களை தண்டித்து நல்லவர்களுக்கு சன்மானம் அளிப்பவன். | தேவன் பரிசுத்தர், கிறிஸ்துவின் மரணத்தினூடாக மன்னிப்புத் தருபவர். |
| 5 | தன்னுடைய சித்தத்தை மட்டும் வெளிப்படுத்துகிறான். | தன்னை முழுவதும் வெளிப்படுத்துகிறார் (சித்தம், இயல்பு உட்பட) |
| 6 | இயேசு கடவுளின் குமாரனல்ல, சிலுவையில் மரிக்கவில்லை, உயிர்தெழவில்லை, அல்லாஹ் தனது நபியை இம்சையடைய தோல்வியடைய விடமாட்டான், முகம்மதுவே அவனது இறுதி நபி. | இயேசு தேவனுடைய குமாரன், கடவுள் மனிதனாக உலகிற்கு வந்தவர், சிலுவையில் அறையப்பட்டு மரித்து உயிர்த்தெழுந்தார், தேவனோடு மனிதனை ஒப்புரவாக்குவதற்கு இயேசு மரிக்கவேண்டியது அவசியமாயிருந்தது. |
| 7 | வேதாகமம் கலங்கப்படுத்தப்பட்டுள்ளது, குர்ஆன் பிழையற்றதும் முந்தைய வேதங்களைவிட தரத்தில் உயர்ந்தது. | வேதாகமம் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு தேவ மனிதர்களால் எழுதப்பட்ட தேவனின் வெளிப்பாடுகள். |
| 8 | கிரியைகளினாலே இரட்சிப்பு. | கிறிஸ்துவை விசுவாசிப்பதின் மூலம் கிருபையினாலே இரட்சிப்பு. |
| 9 | புலன் இன்பம் தரும் சொர்க்கம். | தேவ சமூகத்தில் நித்தியமாக வாழ்வது பரலோகம். |

- **ஏனைய மதத்தவரோடு தொடர்புகொள்ளுதல்(*Relatives with Other Religious People*)**

  ஏனைய மதத்தவரோடு தொடர்புகொள்ளும் முறைமைகள்…

  - **தவறான முறைமைகள்(Incorrect Methods)**
    1. **தாக்கும் முறைமை**: நேரடியாக மற்றைய மதங்களின் நம்பிக்கைகளை தாக்கி பேசுதல்
    2. **இசைந்துபோகும் முறைமை**: மற்றைய மதத்தவர்களின் நம்பிக்கைகளை ஏற்றுக்கொள்ளுதல்
  - **சரியான முறைமைகள்(*Correct Methods*)**
    1. **இதயத்துடன் பேசும் முறைமை:** அவர்களின் உள்ளார்ந்த தேவைகளோடு பேசுதல். உதாரணமாக: லூக்கா 4:17-20
    2. **ஆரம்ப தொடர்புகளை ஏற்படுத்தும் முறைமை:** அவர்களால் விளங்கிக்கொள்ளக்கூடிய அல்லது அவர்களோடு சம்பந்தப்பட்ட விடயங்களிலிருந்து அவர்களோடு தொடர்புகளை ஏற்படுத்துவதன் மூலம் பேசுதல். உதாரணமாக: மத்தேயு 4:19; யோவான் 4:10,14
    3. **பொதுவான பிரச்சனைகளை முன்வைக்கின்ற முறைமை:** பயம், பாதுகாப்பு, நோய் போன்றவை
    4. **பொதுவான சமய சிந்தனைகளைக் கொண்டு பேசும் முறைமை:** பிராத்தனை அல்லது ஜெபம்
    5. **முரண்படுத்தும் விடயங்களை முன்வைக்கும் முறைமை**: உதாரணங்களாக
       - தேவர்களும் அசுத்த ஆவிகளும் தம்மீது கோபம் கொள்வர் என்ற பயம் இருக்கும் ஒருவருக்கு தேவன் அன்பானவர் என்று கூறலாம்.
       - மனிதனுடைய கர்மாவுக்கு ஏற்ப அவனுக்கு தண்டனை உண்டு, மன்னிப்பு கிடையாது என்று சொல்லும் ஒருவருக்கு தேவன் மன்னிக்கிறவர் என்று கூறலாம்.
       - தீயவர்களை அழிக்கவும் நல்லவர்களை பாதுகாக்கவுமே அவதாரங்கள் எடுக்கப்பட்டன என்று கூறும் ஒருவருக்கு இயேசு பாவிகளை மீட்க பூமிக்கு வந்தார் எனக் கூறலாம்.

- **ஏனைய மதத்தவரோடு தொடர்புகொள்வதற்கான ஆயத்தங்கள்(*Preparations to meets Other Religious believers*)**
    - சமயங்களைப் பற்றி அறிந்து கொள்ளுங்கள்
    - ஏனைய மொழிகளை கற்றுக் கொள்ளுங்கள்
    - மக்களுடன் உங்களை அடையாளப்படுத்திக் கொள்ளுங்கள்
    - நன்றாக செவிமடுப்பவராக இருங்கள்
- **நற்செய்தியை அறிவிப்பதிலுள்ள பொதுவான நியதிகள்(*Common things belongs to the Gospels*)**
    - எளிமையாக முன்வைத்தல்
    - நேர்மறையான அணுகுமுறை
    - இயேசுவை மையப்படுத்தி பிரகடனங்களை முன்வைத்தல்
    - பொருத்தமுள்ள தொடர்பாடலைக் கொண்டிருத்தல்
- **இந்துக்களுக்கு நற்செய்தியை அறிவித்தல்( *Preaching the Gospel to Hindus*)**

    இந்துக்களில் நான்கு விதமானவர்கள் காணப்படுகின்றனர்.
    - சமய சார்பற்ற இந்துக்கள்
    - திறந்த மற்றும் பரந்த மனப்பான்மையுடைய இந்துக்கள்
    - மத வைராக்கியமுள்ள (தீவிரமுள்ள) இந்துக்கள்
    - சாதாரண இந்துக்கள்

**இந்துக்களுக்கு நற்செய்தியை அறிவிக்கும் போது கவனத்திற்கொள்ளவேண்டியவை…**

- கிறிஸ்தவத்தை உயர்த்தி இந்து மதத்தை தாழ்த்தி பேசக்கூடாது
- விமர்சனம் செய்வதை தவிர்க்க வேண்டும்
- ஒப்பிட்டு பேச வேண்டாம்
- தேவையற்ற பேச்சுக்களை தவிர்க்க வேண்டும்
- பொது இடங்களில் வைத்து விமர்சிக்க வேண்டாம்
- ஒரேமாதிரியான அணுகுமுறையைத் தவிர்க்க வேண்டும்
- பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்தலோடு செயற்பட வேண்டும்

**செய்ய வேண்டியவை…**

- நல்ல உறவை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்
- உணர்வுகளுக்கு மதிப்பளித்து பொறுமையாக பேச வேண்டும்
- பாராட்டிப் பேசுங்கள்
- தாழ்மையுடன் மனதுருக்கத்துடன் பேசுங்கள்
- சாட்சியுள்ள வாழ்க்கை வாழ்ந்து காண்பிக்க வேண்டும்
- மலைப்பிரசங்கத்தைப் பகிர்ந்து கொள்ளமுடியும்
- இயேசு கிறிஸ்து சரித்திரத்தில் வாழ்ந்தவர் என்பதையும் தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதலே இயேசு என்றும் அறிவிக்கலாம்

- பாவத்தைக் குறித்தும் தேவ கிருபையைக் குறித்தும் பேசலாம்
- பல அவதாரங்களில் கிறிஸ்து ஒருவரல்ல, அவர் மட்டுமே இரட்சகர் என்று சொல்லவேண்டும்
- கிறிஸ்துவுக்குள்ளாக உறுதியான எதிர்காலம் உண்டு எனக் கூறலாம்
- கிரியையினால் அல்ல கிருபையினால் (விசுவாசத்தைக்கொண்டு) இரட்சிப்பு என்பதை சொல்ல வேண்டும்
- மனதிலுள்ள காயங்களை அறிய முட்படுங்கள்
- உங்களிடம் உள்ளதைப் பகிர்ந்து கொள்ளுங்கள்

➲ **பௌத்தர்களுக்கு நற்செய்தியை அறிவித்தல்( *Preaching the Gospel to Buddhists*)**

- சரீரமானது நல்லதென்றும் உலக வாழ்க்கையானது சந்தோஷமானதென்றும் கூறலாம்.
- தேவனோடு உறவு கொள்ள எங்களை வெறுக்க வேண்டிய அவசியமில்லை என்று கூறலாம்.
- கொலோசெயர் நிருபத்தை அடிப்படையாகக் கொண்டு அதனை அதிகம் பகிர்ந்துகொள்ளுங்கள்

➲ **இஸ்லாமியர்களுக்கு நற்செய்தியை அறிவித்தல்(*Preaching the Gospel to Islamises*)**

- உங்கள் சாட்சியை சொல்ல முயற்சியுங்கள். சாட்சி சொல்ல கிடைக்கும் தருணங்களை விட்டுவிடாதிருங்கள்.
- பழக்க வழக்கங்களை சரியாக அறிந்து கொள்ளுங்கள்
- அவர்களுடைய பாஷையைப் படியுங்கள்
- அவர்களை உண்மையாய் நேசித்து சாந்தமாக நடந்து கொள்ளுங்கள்
- தேவையில்லாமல் தர்க்கித்து சந்தர்ப்பங்களை இழந்து விடாதிருங்கள்
- அவர்கள் பேசுவதை அமைதியாகச் செவிமடுங்கள்

➤ **பொதுவான தளத்தைக் கண்டறிந்து, புரிந்துணர்வை ஏற்படுத்துதல்...**

ஏனைய மதத்தினருடனான தொடர்பாடல்களில் ஒரு பொதுான தளத்தை உருவாக்க வேண்டும். பின்னர் புரிந்துணர்வுடன் அவர்களுடன் தொடர்புற வேண்டும். இல்லையெனில் வேண்டத்தகாத பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிவரும். முதலில் நட்புணர்வை ஏற்படுத்த வேண்டும். மதமாற்றம் என்கிற போர்வையைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். உங்களுடைய சாட்சி எனும் பொதுவான தளத்தைப் பயன்படுத்துவதே சாலச்சிறந்ததாகும். மற்றவர்களின் உணர்வுகளை, நம்பிக்கைகளை நாம் நன்கு செவிமடுக்க வேண்டும். பின்னரே சத்தியத்தை அறிவிக்க வேண்டும்.

- **கிறிஸ்தவ தொடர்பாடல்களிலுள்ள சவால்கள்(*Challenges in Christian Communications* )…**
  - **தவறான தொடர்பாடல்களும், முரண்பாடுகளும்…**
    - **கிறிஸ்தவ சமூகத்திற்குள் உள்ள முரண்பாடுகள்…**
      - ✓ **மாறுபட்ட சபை அமைப்புக்கள்…**

        ஒவ்வொரு சபைகளும் தங்களுக்கென்ற மாறுபட்ட ஆராதனை முறைகள், பழக்கவழக்கங்கள், தொடர்பாடல் முறைகள், மாறுபட்ட சாக்கிரமெந்துகள், மாறுபட்ட போதனை முறைகள், மாறுபட்ட நாட்கள் என்பனவற்றைப் பயன்படுத்துவதால் கிறிஸ்தவ சமூகத்திற்குள் ஒரு பொதுவான அடித்தளத்தைக் கண்டபிடிப்பது அரிதாகவுள்ளது.

      - ✓ **பயம்…**

        தங்களுடைய சபையிலுள்ள விசுவாசிகளை பிற சபையினர் கபளிகரம் செய்துவிடுவார்கள் என்ற பயத்தினால், பிற சபையினரோடு நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்த பயப்படுகின்றனர். அத்துடன் தலைமை பிற சபையாருடன் தொடர்புறுவதை அதிகம் விரும்பாமல் இருக்கின்றது.

      - ✓ **பொறாமை…**

        பிற சபைகளின் வளர்ச்சியை பொறுக்க முடியாமல் இதர சபைகள் பொறாமை கொள்கின்றன. இதனால் ஒரு சபை, மற்றய சபைகளைப் பற்றி அவதூறுகளைப் பேசுவதும், குறைத்து எடைபோடுவதும், குற்றம் சாட்டுவதும் இன்று சாதாரணமான விடயங்களாகிவிட்டது. இதனால் சபைகளுக்குள் ஒரு உடன்பாட்டைக் காண்பது அரிதாகவுள்ளது. சபைகளின் தலைமைகள் தங்களுக்குள் உறவுகளை வைத்துக் கொண்டாலும், கீழ்மட்ட ஊழியர்கள், விசுவாசிகள் ஏனைய சபையினருடன் தொடர்புறுவதை தடுக்கின்றனர்.

      - ✓ **உபதேசக் கோளாறுகள்..**

        ஒவ்வொரு சபைக்குமான தனிப்பட்ட போதனை முறைகள், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் காணப்படுகின்றன. இது ஏனைய சபைகளின் மக்களுக்கு சந்தேகங்களையும், கேள்விகளையும் எழுப்புகின்றது. இதனால் ஒருவரை ஒருவர் மதியாத தன்மை காணப்படுகின்றன. இது தொடர்பாடல்களுக்கு பெரும் சவாலாக இருக்கின்றது.

      - ✓ **ஏற்றத்தாழ்வு…**

        ஒவ்வொரு சபைகளும் தங்களுக்கிடையே ஏற்றத்தாழ்வுகளை பார்க்கின்றனர் சபைகளை $A, B, C\ldots$என அதன் தராதரத்தை, மக்களின் எண்ணிக்கையைக் கொண்டு பிரித்துவிடுகின்றனர். இதனால் ஏழை சபைகளை ஒரு பொருட்டாகக் கூட எண்ணாத நிலைகள் காணப்படுகின்றன.

✓ **விசுவாசிகளைத் திருடல்...**

இன்று ஒரு சபையிலிருந்து மற்ற சபைக்கு விசுவாசிகளைக் கவர்ந்திழுக்கும் காரியங்கள் நடைபெறுவதால், ஒவ்வொரு சபைகளும் பிற சபைகளை குற்றம் சொல்லிக்கொண்டே இருக்கின்றன. இதனால் தம் விசுவாசிகள் பிற சபைக்குச் செல்ல மாட்டார்கள் என்ற நம்புகின்றனர். ஆனால் சபைகளுக்கிடையே பகை உணர்வை இது ஏற்படுத்தி தொடர்பாடல்களில் சிக்கலை உருவாக்குகின்றன.

✓ **சாதி, கலாச்சார, பண்பாட்டு, மொழி வேறுபாடுகள்...**

பன்முகத் தன்மையான மக்கள் சபைக்குள் காணப்படுவதால், ஏற்ற இறக்கங்கள் காணப்படுகின்றன. இதனால் சபைக்குள்ளும், சபைகளுக்குள்ளும் சீரான தொடர்பாடலை ஏற்படுத்த முடியாது, தொடர்பாடலானது சவாலான காரியங்களை எதிர்கொள்கின்றது.

➤ **தவறான புரிந்துணர்வுகளை நிறுத்தும் தொடர்பாடல்கள்...**

- ✓ தேவ பயத்துடன் கூடிய தொடர்பாடர்கள்
- ✓ அறநெறிகளுக்கு உட்பட்ட தொடர்பாடல்கள்.
- ✓ அன்பிபை பிரதானமாகக் கொண்ட தொடர்பாடல்
- ✓ ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளும் தொடர்பாடல்கள்.
- ✓ போட்டி, பொறாமைகள் அற்ற தொடர்பாடல்கள்
- ✓ தராதரம் பாராத தொடர்பாடல்கள்.
- ✓ சத்தியத்தில் நடக்கும் தொடர்பாடல்
- ✓ ஏற்றத்தாழ்வு பாராத தொடர்பாடல்கள்.
- ✓ பிறரது தொடர்பாடலை மதிக்கும் தொடர்பாடல்கள்.
- ✓ மன்னிக்கும் தொடர்பாடல்கள்.
- ✓ மனம்விட்டு பேசும் தொடர்பாடல்கள்.
- ✓ பிறரை உயத்த வேண்டும் என்கிற நினைப்பிலான தொடர்பாடல்கள்.
- ✓ சமாதானத்தை உண்டுபண்ணும் தொடர்பாடல்கள்.
- ✓ தேவையற்ற விவாதங்கள் இல்லாத தொடர்பர்டல்கள்.
- ✓ கற்றுக்கொள்ளும் மனப்பான்மையிலான தொடர்பாடல்கள்.
- ✓ இரகசியத்தை பேணும் தொடர்பாடல்கள்.

- **தொழில் நுட்ப வளர்ச்சியும், சமூக வலைத்தளங்களும்(*Technological development & Social Networks*)…**

பிடிக்கிறதோ, பிடிக்கவில்லையோ, இன்றைய உலகம் தொழில்நுட்ப உலகின் விரல்களில் அகப்பட்டுக் கிடக்கிறது. என்பதை ஒத்துக்கொண்டுதான் ஆகவேண்டும்.

‘‘அதிகாலையில் தேவனைத் தேடு’’ என்பது பழைய மொழி முடிந்தாகிவிட்டது. விடிந்தும் விடியாமலும் வாட்சப்பிலும், முகநூலிலும் விரல்களை தேய்ந்தும், முகம் பார்த்தும் தான் இன்றைய பொழுது விடிகிறது. இரயில் சினேகிதம் என்றொரு வார்த்தையே இன்றைக்கு இல்லாத ஒன்றாகிவிட்டது. இரயிலில் என்ன சினேகம் எனக் கேட்கும் அளவிற்கு நவீனம் எல்லா பழக்கங்களையும் மூடிவிட்டது. 24 மணிநேரம் ஒரே பெட்டியில் பயணித்தாலும் முன்னே இருப்பவரின் பெயர் கூட தெரியாமல் இறங்கும் கூட்டமே அதிகம். ஏனெனில் தமது கையடக்கத் தொலைபேசியிலேயே காலத்தைக் கழிக்கின்றனர். தொலைவில் இருக்கும் சொந்தங்களுக்கு டிஜிடல் வணக்கம் சொல்லிவிட்டு அருகில் இருக்கும் சொந்தங்களுக்கு ஒரு புன்னகைகூட தெரிவிக்காத காலத்தில் நாம் வாழுகின்றோம். நிமிர்ந்த நடையெல்லாம் ஸ்மார்ட் போன் வருவதற்கு முன்னர் தான். இப்போ அனைவரும் குனிந்த தலை நிமிராத பரிசுத்தவான்களாகி விட்டனர். இதனால் எத்தனை விபத்துக்கள் நடைபெறுகின்றன. தொழில் நுட்பம் அதிகரிக்கும் காலத்தில் உலகம் அழியும் என்பது நடந்துவிடுமோ எனப் பயமாக இருக்கின்றது.

வேட்டையாடிய மனிதனுக்கு ஈட்டி கிடைத்தது தொழில் நுட்ப வளர்ச்சி

ஈட்டியால் குத்தி மீன் பிடித்தவன் வலை வீசி மீன் பிடிப்பது தொழில்நுட்ப வளர்ச்சி.

குகைகளில் வாழ்ந்தவன் கோபுரத்தில் வாழ்வது வளர்ச்சி. சைகையால் பேசியவன் கடதாசி மூலம் பேசுவது தொழில்நுட்ப வளர்ச்சி. இப்படி தொழில்நுட்பமானது விண்ணைத்தொடும் அளவிற்கு வளர்ந்துவிட்து. அதிலும் தொடர்பு சாதனங்களிலும், முறைகளிலும் ஏற்பட்ட வளர்ச்சி சொல்லிலடங்காதது. இவ்வளர்ச்சியானது கிறிஸ்தவத்தில் எவ்வாறான மாற்றங்களை உண்டுபண்ணுகிறதென்பதே நமது ஆராய்ச்சி.

கணினி வந்தபோது இதுவே தொழில்நுட்பத்தின் உச்சம் என நினைத்தோம். ஆனால் அதுவே இன்று தொழில் நுட்பத்தின் முதற்படி என்கின்றனர். இன்று செயற்கை புத்திசாலித்தனம்(*Artificial Intelligent*) தலைவிரித்தாடுகிறது. நாளை வேறு ஒன்று ஆக்கிரமிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

தொழில்நுட்ப வளர்ச்சி என்பது தேவன் அனுமதித்ததுதான். ஆனால் அதன் எல்லை அவரால் மட்டுப்படுத்தப்படும். வேதாகமம் தொழில் நுட்பத்தைப் பேசுகிறது(காயின் நகரை உருவாக்கல் - ஆதி 4:17, பாபேல் கோபுரம் கட்டப்படல், நோவாவின் பேழை, உசியா இராஜாவின் பெரிய கற்களை வீசுவதற்கான ஏவுகணைகள்,...) தேவன் அனுமதிக்கும்வரை வளர்ச்சியும் நடைபெறும். இந்த வளர்ச்சிகளை நாம் எவ்வாறு நமது ஆவிக்குரிய வாழ்வை வெற்றிகரமாக்குவதற்குப் பயன்படுத்துவது என்பதிலேயே நமது வெற்றி அடங்கியிருக்கிறது. மனித நேயத்தையும், மனித உணர்வுகளையும் தொழில் நுட்பம் அழித்துவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இரும்பு இயந்திரங்களின் வருகை இருதயங்களை இரும்பாக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். குடும்ப உறவுகளுக்குள் தொழில் நுட்பம் நுழைந்து பிளவை ஏற்படுத்துவது தடுக்கப்படல் வேண்டும். இன்று கிறிஸ்தவ செய்திகள், பிரசங்கங்கள், வேதபாடங்கள் இரத்திரனியல் ஊடாக விரல் நுனியில் தவளுகின்றன. இவை உண்மையான ஆன்மீக வளர்ச்சிக்குப் பயன்படல் வேண்டும். ஆவியின் கனிகளை உருவாக்க இவை பயன்பட வேண்டும். கிறிஸ்தவர்களை இணைத்து ஆரோக்கியமான உறவுகளை மேம்படுத்த தொழில்நுட்ப வளர்ச்சி பயன்பட வேண்டும். எது எப்படியோ தேவனின் மகிமை மட்டுமே தொழில்நுட்ப வளர்ச்சியில் உச்சத்தில் இருக்கும் தொடர்பாடலால் நிகழவேண்டும்.

- **தொழில்நுட்ப வளர்ச்சியால் கிறிஸ்தவ தொடர்பாடலுக்கு ஏற்படும் பாதிப்புக்கள்...**

  - **அந்நியபப்டுதல்...**

    கிறிஸ்தவமானது ஒருமனப்பட்டு, ஒருமித்து வாழவே அழைக்கின்றது. ஆனால் தொழில்நுட்ப வளர்ச்சியினால் கிறிஸ்தவ தொடர்பாடல்களில் விரிசல் ஏற்படுகின்றது. சகோதரர்கள் ஒருமித்து வாழ்வது சந்தோசம்(சங் 133:1, அ.ந 2:44) ஆனால் இன்று இலத்திரனியல் தொடர்பாடல் சாதனங்கள் ஒருவரை ஒருவர் பிரித்து தனிமைப்படுத்தப் படுகிறார்கள். மனிதர்கள் உறவாடுவதைவிட கைத்தொலைபேசியுடன் மணிக்கணக்கில் உறவாடுகின்றனர். இதனால் குடும்பத்தில், வேலைத்தளத்தில், பாடசாலையில், சபைகளில் மனித உறவுகள் தூரமாக்கப்படுகின்றன. ஒருவருக்கொருவர் அந்நியராகின்றனர். மனித உணர்வுகள் பறிமாறப்படுவது மட்டுப்படுத்தப்படுகின்றது(ஆமோ 3:3). பிள்ளைகள் - பெற்றோர், கணவன் - மனைவி, ஆசிரியர் - மாணவர்கள், எஜமான்கள் - தொழிலாளிகள் என பலரும் ஒருவருக்கொருவர் தூரப்போகின்றனர்.

  - **அடிமையாதல்(*Addiction*)...**

    நவீன தொடர்பு சாதனங்களில் இன்று எல்லோரும் அடிமைகளாகவே இருக்கின்றனர். முகநூல், வட்ஸ்அப், யூ ரியூப் என பல சமூக வலைத்தளங்களில் எப்போதும் ஒட்டிக்கொண்டே வாழ்கின்றனர். சிறுவர்கள் இலத்திரனியல் விளையாட்டுக்களில் அடிமைகளாகின்றனர். இளைஞர்கள் வட்ஸ்அப்பில் அடிமைகளாகின்றனர். வளர்ந்தோர் யூரியூப்பில் அடிமைகளாக இருக்கின்றனர். தமது நேரத்தை சிறிய திரைக்குள் மறைத்துக்கொண்டு வாழ்வின் பெரும் பகுதியை செலவிடுகின்றனர். போதைப் பொருளைப் போல் நவீன தொடர்பாடல்களிலும் அடிமைகளாக இருக்கின்றனர். பிழையென தெரிந்தாலும் உணராமல் வாழ்கின்றனர்(நீதி 29:19)

  - **சோம்பேறிகளாகின்றனர்...**

    நேரடியாகச் சென்று முகமுகமாகச் சொல்கின்ற காரணிகளை இன்றைய தொழில் நுட்பம் அறைக்குள் இருந்து அறிவிக்கின்றது. இதனால் மனிதன் சோம்பேறிகளாக மாறுகின்றான். கிறிஸ்தவத்தைப் பொறுத்தவரை, வெளியில் சென்று ஊழியம் செய்வது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் இன்று ஆராதனைகள் கட்டிலில் இருந்தபடியே ZOOM இல் ஆராதிக்கின்றனர். தேவபயத்துடன் ஆராதிக்க வேண்டிய நாம் அசட்டையுடன் ஆராதிக்கின்றோம்(எண் 15:31, 1 சாமு 2:30, சங் 107:10, மல் 1:6). மேலும் சோம்பேறிகளைத் தேவன் வெறுக்கிறார்(நீதி 6:6, 6:9, 10:26, 12:24….)

  - **பாவத்தில் வீழ்வதற்கான சந்தர்ப்பம் அதிகம்...**

    பாவத்தைக் கண்டால் விலகி ஓடு என வேதம் சொல்கிறது. இன்று நம் கைகளில் இருக்கும் தொலைத் தொடர்பு சாதனங்கள் எல்லா இரகசியமான காரியங்களையும் வெளியரங்கமாகக் காட்டுகின்றது. இச்சை(மத் 5:28) என்பதை புதிய ஏற்பாடு மிகவும் பயங்கரமான பாவமாகவே பார்க்கிறது. ஆகவே எவ்வளவுதான் நாம் மனக்கட்டுப்பாட்டுடன் இருப்பினும், பாவத்தில்

வீழ்வதற்கான வழிகள் இன்று அதிகமாகவே உள்ளது. பாவமானது வாசற்படியில் காத்துக்கிடக்கிறது(ஆதி 4:7) என வேதம் சொல்கிறது. இன்று நம் பொக்கெட்டுகளிலேயே பாவம் காத்திருக்கிறது. அத்துடன் நியாயாதிபதியும் வாசற்படியிலேயே நிற்பதாக(யாக் 5:9) வேதம் எம்மை எச்சரிக்கிறது. ஆகவே நவீன தொழில் நுட்ப வளர்ச்சியில் பயன்படுத்தப்படும் தொடர்பு சாதனங்களை பாவிக்கும்போது நாம் மிகவும் அவதானமாக இருத்தல் வேண்டும். இல்லையேல் நம்மையறியாமலே நாம் பாவத்தில் வீழ்ந்து விடுவோம்.

- **காலவிரயம் செய்கிறோம்…**

பல முக்கியமில்லாத விடயங்களுக்கும், கற்பனை நிகழ்வுகளுக்கும், மூடநம்பிக்கைகளுக்கும், பயங்கர உணர்வுகளுக்கும் நாம் நமது காலத்தை விரயம் செய்கின்றோம். மணிக்கணக்கில், நாட்கணக்கில் நமது பொன்னான நேரத்தை அழித்துக் கொண்டிருக்கிறோம். காலத்தை விரயம் செய்பவதை வேதம் "காலவியரம் வேண்டாம்" என்கிறது(எபே 5:16). மேலும் காலத்தை நாம் கவனமாய் பயன்படுத்த வேண்டும். கடந்துபோன ஒரு நொடியைக்கூட எம்மால் மீண்டும் கொண்டுவர முடியாது.

- **கவனச்சிதறல்…**

தேவனில் கவனத்தைச் செலுத்த வேண்டிய நாமோ, வேறுவிதமான நிகழ்வுகளில் நம் எண்ணங்களைச் செலுத்தி தேவ மகிமையை இழக்கிறோம். இதனால் தேவனோடு உள்ள தொடர்பாடலில் விரிசல்களை ஏற்படுத்துகின்றோம். தேவனின் பிரசன்னத்தை எதிர்பாத்திருக்க வேண்டிய நாமோ நிகழ்வுகளின் பிரசன்னத்தை எதிர்பார்த்திருக்கின்றோம்.

- **தங்கியிருத்தல்…**

தேவனில் தங்கியிருக்க வேண்டிய நாமோ, இலத்திரனியல் சாதனத்தில் தங்கியிருக்கிறோம். அன்று பிரசங்கங்களைத் தயார் செய்ய வார்த்தையிலும், ஆவியானவரிலும் தங்கியிருந்த போதகர்கள் இன்று இணையத்தில் தங்கியிருக்கின்றனர்.

- **மோசடிகளுக்கும் ஏமாற்றத்திற்கும் உள்ளாகின்றோம்…**

இன்று நம்பகமற்ற தகவல்கள் மிகவும் ஏராளமாக வந்து குவிகின்றன. இதனால் எமது விசுவாசத்தைக்கூட இழக்க நேரிடுகின்றது. கிறிஸ்தவ உண்மைக்குப் புறம்பான செய்திகளும், கிறிஸ்தவத்தைத் தாக்கும் செய்திகளும் ஏராளமாய் இன்று சமூக வலைத்தளங்களில் உலாவுகின்றது. இதனால் கிறிஸ்தவ விசுவாசத்தில் சந்தேகங்களை எழுப்ப ஆளாகின்றோம்.

- **பிரிவினைகள்…**

கிறிஸ்தவத்திற்குள் பல பிரிவினைகள் உருவாக இந்த நவீன தொடர்பாடல் காரணமாயிருக்கின்றன. முரண்பாடான போதனைகள், போலியான தீர்க்க தரிசனங்கள் என்பவற்றின் மூலம் பல பிரிவினைகளும், குழப்பங்களும் ஏற்படுகின்றன.

- **சபை அமைப்பு பாதிக்கப்படல்…**

  இன்று இந்த நவீன தொடர்பாடல்களால் சபை கூடுவதே பலருக்கு சங்கடமாயிருக்கின்றது. பலர் சபைக்குச் செல்லாமலேயே(எபி 10:25) இருக்கின்றனர். இதனால் ஒற்றுமை, பரிசுத்தம் என்பன பதிப்பிற்குள்ளாகின்றது.

- **அலட்சியம்…**

  இன்று நவீன தொடர்பாடல் சாதனம் இல்லாதோரை அலட்சியம் செய்யும் கலாச்சாரம் உருவாகின்றது. சபைகளுக்கள்ளேயே இது நடக்கின்றது.

- **சமூக வலைத்தளங்கள்…**

  இன்று எதற்கெடுத்தாலும் சமூக வலைத்தளங்களே முன்நிற்கின்றன. ஆபாசங்கள், உண்மைக்குப் புறம்பான செய்திகள், வன்முறையைத் தூண்டும் நிகழ்வுகள், மனித உணர்வுகளைத் தூண்டி வன்முறைக்குள் இட்டுச் செல்லும் செய்திகள், இனப்பிளவு, சாதிப்பிரச்சனை என பல சமூக விரோத, சமூக சீரழிவு நிகழ்ச்சிகளை தடையின்றி தருகின்றது. இது சிறுவர் முதல் பெரியோர் வரை ஆபாயமான சூழ்நிலைக்குள் இட்டுச் செல்கின்றது.

- **தொழில் நுட்ப வளர்சியால் எதிர்கொள்ளும் சவால்கள்…**
  - ஒருவரை ஒருவர் கனம் பண்ணுவதில்(ரோம: 1210)
  - ஒருவரில் ஒருவர் அன்பு செலுத்துவதில்(யோவா 13:35)
  - சத்தியத்தை சத்தியமாக அறிவிக்க முடியாதுள்ளது(1 யோவா 2:4)
  - கடிந்துகொள்ளும் செயற்பாடு அருகிவருகின்றது(2 திமோ 3:16-17)
  - பாவ சிந்தையும், பாவத்தின் மீதான மோகமும் அதிகரிக்கின்றன.(சங்: 66:18)
  - தேவ பயம் அற்றுப் போகின்றது.(நீதி 1:7)
  - சுய தியானம் நீங்குகின்றது.(சங் 1:2)
  - ஒற்றுமையும், ஒன்று கூடலும் தணிகின்றன.(யோவா 17:22)
  - உறவுகளில் விரிசல் ஏற்படுகின்றது.(1 கொரி 11:18)
  - சபை அமைப்பு கேள்விக்குறியாகின்றது.(கொலோ 1:18)
  - சகோதர பாசம் சிதறடிக்கப்படுகின்றது.(1 யோவா 29-10)

- **கிறிஸ்தவ தொடர்பாடலில் கவனிக்க வேண்டியவைகள்(***Points to note in Christian Communications***)**
  - **கிறிஸ்தவ தொடர்பாடலின் முக்கிய கொள்கைகள்…**
    - எந்த நிலையிலும் தேவனை மகிமைப்படுத்த வேண்டும்.(1 கொரி 10:31)
    - கிறிஸ்தவ அடிப்படை சத்தியங்களுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.(2 யோவா 1:4)
    - உபதேச திரிபு காணப்படலாகாது.(மத் 15:9)
    - எப்போதும் உண்மையை வெளிப்படுத்த வேண்டும்.(யோவா 8:32)

- ✍ கிறிஸ்தவ அறநெறிகளை உடையதாக இருத்தல் வேண்டும்.(பிலி 4:8)
- ✍ கிறிஸ்துவை பிரதிபலிக்க வேண்டும்.(எபே 5:32)
- ✍ பிறரின் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ண வேண்டும்.(மாற் 9:24, லூக் 17:5)

- **கிறிஸ்தவ சூழலில் தொடர்பாடலை வலியுறுத்துதல்…**
  - ✍ எல்லாமே தேவனுடைய மகிமைக்கானவைகளாகவே இருத்தல் வேண்டும்.(1 நாளா 16:28)
  - ✍ அன்பையும், மன்னிப்பையும் பிரதானமாகக் கொண்டிருத்தல் வேண்டும்.(1 கொரி 13:13)
  - ✍ ஒற்றுமையை உருவாக்குவதாக இருத்தல் வேண்டும்.கலா 3:28)
  - ✍ நற்செய்திக்கு பாதை வகுப்பதாக அமைய வேண்டும்.(2 கொரி 10:14)
  - ✍ ஆவிக்குரிய கனியை வெளிப்படுத்துவதாக இருத்தல் வேண்டும்.(கலா 5:22)
  - ✍ கிறிஸ்துவை மையமாகக் கொண்டு அமைய வேண்டும்.(கொலோ 3:4)

- **அன்றாட தொடர்பாடல்களில் கிறிஸ்தவ விழுமியங்களைக் கைக்கொள்ளுதல்…**
  - ✍ எவருடன் தொடர்புகொண்டாலும் எமது வாயிலிருந்து கெட்ட வார்த்தை வரக்கூடாது.(எபே 4:29)
  - ✍ பிறர் மனம் நோகக்கூடாது.(ஏசா 29:24)
  - ✍ 10 கட்டளைகளை பிரதிபலிப்பதாக அமைய வேண்டும்.(உபா 4:13-14)
  - ✍ வேதத்தை சார்ந்திருத்தல் வேண்டும்.(சங் 119:165)
  - ✍ மற்றவருக்கு ஆசீர்வாதமாக அமய வேண்டும்.(ஆதி 12:2)

- **இயேசுவின் தொடர்பாடல் பாணியைப் பிரதிபலித்தல்…**


இயேசுவின் தொடர்பாடல் போதனையாகவோ, பிரசங்கமாகவோ, உருவகமாகவோ, கதைகளாகவோ, கட்டளைகளாகவோ, படைய ஏற்பாட்டின் மேற்கொள்களாகவோ, கண்டிப்புக்களாகவோ இருந்தது. அவர் என்றுமே மற்றவர்களுடன் தொடர்புற பின்னிக்கவில்லை. சோர்வடையவில்லை. நாமும் அவ்வாறே உற்சாகத்துடனும், நம்பிக்கையுடனும், பிறருடன் தொடர்பாடலை மேற்கொண்டு தேவனுடைய இராச்சியத்தின் அபிவிருத்திக்காக உழைக்க வேண்டும். இயேசுவினுடைய தொடர்பாடல்கள் கீழ்வருபவர்களுடன் காணப்பட்டது…

- ✍ தனிப்பட்ட தொடர்பாடல்(யோவா 4:8)
- ✍ ஓரிருவருடன் தொடர்பாடல்(லூக் 24:13)
- ✍ ஒரு குழுவினருடன் தொடர்பாடல்(யோவா 21:2)
- ✍ பெரு ஜனத்தினருடன் தொடர்பாடல்.(மத் 5:1)

நமது தொடர்பாடல்களும் இவ்வாறே அமைந்து, தேவனுடய இராச்சியத்தையும், நீதியையும் முதலில் தேட வேண்டும். அப்போது எமக்குத் தேவையான அனைத்தும் கிடைக்கும். எமது தொடர்பாடல்கள் தேவனின் மகிமைக்காகவே அமைய வேண்டும். அப்போதுதான் இயேசு என்னில் மகிமையடைவார்.

**பயன்படுத்தப்பட்ட நூல்கள்(*Reference*)…**


1. ஜேசன் ஜோர்ஜஸ், *3 பரிமாண சுவிசேஷம்*, தெற்காசிய இறையியல் மீளாய்வு, USA, Time Press. –
2. தரம் 13 – *கிறிஸ்தவ நாகரீகம்* - ஆசிரியர் வழிகாட்டி, மஹரகம, தேசிய கல்வி நிறுவனம், 2018.
3. மார்கிரட் கலைச் செல்வி லார்பியர், *தொடர்பு இறையியல் ஓர் அறிமுகம்*, மதுரை, தமிழ் இறையியல் நூலோர் குழு, 2003.
4. கொழும்பு உயர்மறை மாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை, *ஞான ஒளி*, புரட்டாதி 2010.
5. Jeffery S. Forrey, *Christian Communication,* The Journal of Biblical Counselling, 1998.
6. Michele Buonfiglio, *An Intellectual Approach to the Communication of the Biblical Message to Secular People*, USA, Andrews University Seventh-day Adventist Theological Seminary, 1995.
7. MASSEY, James Earl, *The Sermon in Perspective: A Study of Communication and Charisma*, Grand Rapids, Michigan Baker Book House 1976.
8. SOGAARD, Viggo, *Media in Church and Mission: Communicating the Gospel*, Pasadena, California William Carey Library, -.

**எமது தொடர்பாடல்கள் தேவனின் மகிமைக்கென்று, அவரது மகிமைக்குள் அமைந்து அவருக்கு மகிமையைத் தரவேண்டும். அவ்வாறு அமையும் போது**

# கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்!